அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 7

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

இவ்வுலகில் ஒருவர் எல்லாச் செல்வங்களையும் அடைய வேண்டும் என்றால் ஒழுக்கமுடையவராக இருக்கவேண்டும். நாம் மிகுந்த அக்கறையுடன் ஆராய்ந்து, எவையெல்லாம் எமக்குரிய சிறந்த ஒழுக்கம் எனக் கண்டறிந்து கடைப்பிடிக்க வேண்டும். அவ்வொழுக்கங்களைத் தொடர்ச்சியாகப் பேணி வாழவேண்டும். ஒழுக்கம் இல்லாதவர்கள் உலகத்தால் வெறுக்கப்படுவார்கள்.

இதனால் புகழ், பெருமை போன்றவை கிட்டாதுபோகும். ஒழுக்கம் உடையவராய் இருப்பது ஒருவருக்கு நற்குடியில் பிறந்தார் என்ற பெருமையையும் தரும். மாந்தர் உயிர்வாழும் காலத்திலே ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், உலகம் அவரைப் புகழ்ந்து போற்றும். அவர் இறந்த பின்பும் அவரது புகழ் நின்று நிலைக்கும் எனத் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது.